வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2024

நிறுவனத்தின் பெயர் : கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

செலவுத் தலைப்பு இல : 213

உள்ளடக்கம்

		பக்கம்
அத்தியாயம் - 01	நிறுவன விபரங்கள் / செயற்படுத்தற் சுருக்கம்	01
1.1	அறிமுகம்..	01
1.2	நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள்	02
1.3	பிரதான பணிகள்..	03
1.4	நிறுவனக் கட்டமைப்பு	03-04
1.5	திணைக்களத்தின் பிரதான பிரிவுகளும் அவற்றின் வகிபாகங்களும்	05-22
அத்தியாயம் - 02	கடந்தகால மற்றும் எதிர்காலத் தொலைநோக்கு	23-24
அத்தியாயம் - 03	வருடத்தின் முழுமையான நிதிச் செயலாற்றுகை	25
3.1	நிதிச் செயலாற்றுகைக் கூற்று	25
3.2	நிதி நிலைமைபற்றிய கூற்று	26
3.3	நிதிப் பாய்ச்சல் தொடர்பான கூற்று	27
3.5	நிதி அறிக்கைகளுக்கான கூற்றுக்கள்	28
3.6	வருமானம் திரட்டும் செயலாற்றுகை	28
3.7	வேறாக்கப்பட்ட ஒதுக்கணீடுகளைப் பயன்படுத்தும் செயலாற்றுகை	28
3.8	நிதிப் பிரமாணம் 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுகள் / திணைக்களங்களின் பிரதிநிதியொருவராக இந்தத் திணைக்களத்திற்கு / மாவட்ட செயலாளர் அலுவலகதிற்கு / மாகண சபைகளுக்கு வழங்கப்பட்ட ஒதுக்கிடுகள்	28
3.9	நிதியல்லாத சொத்துக்களை அறிக்கைப்படுத்தும் செயலாற்றுகை..	29
3.10	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை..	29-47
அத்தியாயம் - 04	செயலாற்றுகைக் குறிகாட்டிகள்	48
4.1	நிறுவனச் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (செயற்றிட்டத்தின் அடிப்படையில்)	48
அத்தியாயம் - 05	பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களைப் (SDG) பூர்த்திசெய்யும் செயலாற்றுகை	49
5.1	இனங்காணப்பட்ட உரிய பேண்தகு அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளைப் பூர்த்தி செய்தலின் வெற்றி	49-50
5.2	சவால்கள்	51
அத்தியாயம் - 06	மனிதவள சுயவிபரம்	51
6.1	ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம்	51
6.2	நிறுவனத்தின் செயலாற்றுகையில் மனிதவளப் பற்றாக்குறையின் அல்லது அதிகரிப்பின் தாக்கம்	51-52
6.3	மனிதவள அபிவிருத்தி	52-53
அத்தியாயம் - 07	இணக்க அறிக்கை	54-63

அத்தியாயம் - 01
நிறுவன விபரங்கள் / செயற்படுத்தற் சுருக்கம்

1.1 அறிமுகம்

நாட்டின் மாணவ - மாணவியருக்கு இலசவக் கல்வியின் பயனைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான பாடசாலைப் பாடநூல்களை இலவசமாக வழங்குதல் மற்றும் அதனுடன் இணைந் ததான மேலதிக வாசிப்பு நூல்கள் மற்றும் கற்றல் துணைச்சாதனங்களை உற்பத்தி செய்யும் தேசிய பணியை நிறைவேற்றும் பொருட்டு கல்வி அமைச்சின் கீழான ஒரு திணைக்களமாகக் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் நிறுவப்பட்டுள்ளது.

பின்னணித் தகவல்கள்

1965 மார்ச் 27 ஆம் திகதியன்று அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்மூலம் வேறான செலவு அலகொன்றாக 1966 செப்டம்பர் 30 ஆம் திகதியன்று அதி விசேட வர்த்தமானி அறிவித்தலொன்றினூடாக அப்போது காணப்பட்ட கல்வி மற்றும் கலாசார அமைச்சின்கீழ் செயற்படுகின்ற ஒரு திணைக்களமாகப் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.

1966 ஆம் ஆண்டு முன்னைய வர்த்தமானி அறிவித்தல்மூலம் கல்வி வெளியீட்டுத் திணைக்களத் திற்குப் பின்வரும் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன.

- ஆரம்ப, இடைநிலை, உயர்கல்விக்குப் பயன்படுத்துவதற்காக அனுமதிக்கப்பட்ட பாட நூல்களை மொழிபெயர்த்தல், வெளியிடல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல், வெளியீட்டு உரிமைகளைக் கொள்வனவு செய்தல்.
- கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான பாடநூல்கள், அகராதிகள், கலைச்சொல் களஞ்சியங்கள் மற்றும் வேறு நூல்களை உற்பத்தி செய்தல், வெளியிடல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல்.
- கற்றல் துணைச்சாதனங்கள், கட்புல / செவிப்புல மற்றும் வேறுசாதனங்களை உற்பத்தி செய்தல், விநியோகித்தல், விற்பனை செய்தல்.
- வாசிப்பு சாதனங்களின் உற்பத்தியை ஊக்குவித்தல்.

1965 இல் B தரத்திலானதொரு திணைக்களமாக நிறுவப்பட்ட கல்வி வெளியீட்டுத் திணைக்களமானது 2004.07.14 ஆம் திகதியிலிருந்து உயர்தரத் திணைக்களமொன்றாகப் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுத் திணைக்களத்தின் பிரதானியின் பதவிப் பெயர் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் எனத் திருத்தி அமைக்கப்பட்டு அமைச்சின் மேலதிக செயலாளர் பதவிக்கு இணையானதாகத் தரமுயர்த்தப்பட்டது.

அடிப்படை வகிபாகங்களை மேற்பார்வை செய்வதை இலகுபடுத்தும் பொருட் டுத் திணைக்களமானது அபிவிருத்தி, உற்பத்தி மற்றும் விநியோகம், வெளியீடு, தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், விற்பனை மேம்பாடு, நிதி, தாபனம், திட் டமிடல் மற்றும் பிறெயி எனும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றின் கீழ் பிரதி மற்றும் உதவி ஆணையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், அலுவலக உதவியாளர்கள், சேவை உதவியாளர்கள், சாரதிகள் முதலிய ஊழியர்களை இணைத்துச் செயற்படத்தக்கதாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது.

1.2. நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, நோக்குகள்

நிறுவனத்தின் தொலைநோக்கு

தொலைநோக்கு

சர்வதேச கல்வி அபிவிருத்தியுடன் இணைந்த உயர் தரத்தினாலான பாடநூல்களை உருவாக்குவதன்மூலம் அனைவருக்கும் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதை உறுதிசெய்தல்.

நிறுவனத்தின் பணிக்கூற்று

பணிக்கூற்று

இலவசப் பாடநூல் விநியோகம் எனும் அரசின் தேசிய கருத்திட்டத்தைச்செயற்படுத்துவதுடன்கல்விச்செயற்பாட்டிற்குத்தேவைப்படும் ஏனைய பாடநூல்கள், செயல்நூல்கள், மொழிப்பெயர்ப்பு நூல்கள், மேலதிக வாசிப்புநூல்கள், சொற்களஞ்சியங்கள், அகராதிகள் உட்பட ஏனைய கட்புல, செவிப்புல துணைச்சாதனங்களை உற்பத்தி செய்து விநியோகித்துக் கல்வித் தரத்தை அபிவிருத்தி செய்வதன்மூலம், செயற்றிறன்மிக்கதும் பண்பும் அறிவும் மிக்கதுமான பிரசைகள் குழுவொன்றை உருவாக்கி நாட்டை அபிவிருத்தி செய்ய உதவுதல்.

நிறுவனத்தின் நோக்கங்கள்

கல்வித் தரத்தை விருத்தி செய்வதினூடாக நாட்டுக்குக் செயற்றிறன் மிக்க பண்பும் அறிவும் கொண்ட பிரசைகள் குழுவொன்றை உருவாக்குதல்.

- அரசாங்கப் பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களில் கல்விபயிலும் தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையிலான சகல மாணவர்களுக்கும் தேவையான பாடசாலைப் பாடநூல்களை இலவசமாக வழங்குதல்.
- மேலதிக வாசிப்பு நூல்களை ஆக்குவதன்மூலம் பாடசாலைக் கலைதிட்டம் மற்றும் மேலதிக அறிவை மாணவர்களுக்கு வழங்குதல்.
- பரீட்சை வினா-விடை நூல்களை அச்சிடுவதன் மூலம் பொதுப் பரீட்சைகளுக்குத் தோற்றுகின்ற மாணவர்களுக்குப் பரீட்சைகளுக்கு முகம்கொடுப்பதற்கான தயார் நிலையை ஏற்படுத்துதல்.
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூல்களை அச்சிட்டு விநியோகிப்பதன்மூலம் பாடத் திட்டம் தொடர்பான அறிவை ஆசிரியர்களுக்கு வழங்குதல்.
- பாடத்திட்டத்துக்குரிய கற்றல்களை மிகவும் வெற்றிகரமானதாக்கும் பொருட்டுத் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்.
- டிஜிட்டல் கற்றல் சாதன ஆக்கங்களினூடாக மாணவர்களின் தொழினுட்பம் மற்றும் பாட அறிவை விருத்திசெய்தல்.

1.3 பிரதான பணிகள்

- இலக்கம் 14, 715/3 1966 செப்டம்பர் 30 திகதி வெள்ளியன்று இலங்கை அரசின் அதிவிஷேட வர்த்தமானி I மூலம் கீழே காட்டப்பட்டுள்ள பணிகள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத் திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- ஆரம்ப, இடைநிலை, உயர் கல்விப் பயன்பாட்டின் பொருட்டு அனுமதிக்கப்பட்ட நூல்களை மொழிபெயர்ப்புச் செய்தல், வெளியிடல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல், வெளியீட்டு உரிமையைக் கொள்வனவு செய்தல்.

- கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான பாட நூல்கள், கலைச்சொல் களஞ்சியங்கள், அகராதிகள் மற்றும் வேறு நூல்களை உற்பத்தி செய்தல் வெளியிடல் விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல்.

- கற்பித்தல் சாதனங்கள், கட்புல, செவிப்புல மற்றும் வேறு சாதனங்களின் உற்பத்தி விநியோகம், விற்பனை.

- வாசிப்பு சாதன உற்பத்திகளை ஊக்குவித்தல்.

திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பும் நிருவாகமும்

நிருவாகம்:

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரியாகக் கடமையாற்றுகின்ற இலங்கை கல்வி நிருவாக சேவையின் விஷேட தர அதிகாரியொருவரான கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்திற்கு நிருவாக செயற்பாடுகளில், இலங்கை கல்வி நிருவாக சேவையின் விஷேட தர அதிகாரிகளான மேலதிக கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் இருவரினதும் அதற்கு மேலதிகமாக, இலங்கை கல்வி நிருவாக சேவை தரம் I ஐச் சேர்ந்த அதிகாரிகளான கல்வி வெளியீட்டு ஆணையாளர்கள் இருவரினதும் ஒத்துழைப்பு கிடைக்கின்றது. நிதிப் பிரிவிற்குப் பொறுப்பாக பிரதம கணக்காளராக இலங்கை கணக்காளர் சேவை தரம் I ஐச் சேர்ந்த ஒரு அதிகாரி செயலாற்றுகின்றார். கணக்காளர் சேவை தரம் II ஐச் சேர்ந்த ஒரு அதிகாரியும் கணக்காளராகக் கடமையாற்றுகின்றார். உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு இலங்கை கணக்காளர் சேவை தரம் I ஐச் சேர்ந்த அதிகாரியொருவர் பொறுப்பாக இருந்து கடமைகளை மேற்கொள்கின்றனர்.

நிருவாகத்தை இலகுவாக்கும் பொருட்டு திணைக்களமானது அபிவிருத்திப் பிரிவு, உற்பத்திப் பிரிவு, வெளியீட்டுப் பிரிவு, நிதிப் பிரிவு, தாபனப் பிரிவு, தகவல் தொழினுட்பப் பிரிவு, விநியோகப் பிரிவு, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, விற்பனை மேம்பாட்டுப் பிரிவு, பிறைல் பதிப்புப் பிரிவு மற்றும் திட்டமிடல் பிரிவு என பிரதான பதினொரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு அடுத்த பக்கத்தில் காட்டப்பட்டுள்ளது.

1.4 கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு - 2024



1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

01. அபிவிருத்திப் பிரிவு
02. திட்டமிடல் பிரிவு
03. உற்பத்திப் பிரிவு
04. வெளியீட்டுப் பிரிவு
05. நிதிப் பிரிவு
06. தாபனப் பிரிவு
07. தகவல் தொடர்பாடல் தொழினுட்பப் பிரிவு
08. விநியோகப் பிரிவு
09. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
10. விற்பனை மேம்பாட்டுப் பிரிவு
11. பிரெயில் பதிப்புப் பிரிவு

01. அபிவிருத்திப் பிரிவு

அரசின் இலவசப் பாடநூல்களைப் பெற்றுக் கொடுக்கும் தேசிய கொள்கையை நடைமுறைப் படுத்துவதே கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள பிரதான பொறுப்பாகும். அந்தக் குறிப்பிட்ட வகிபாகங்களை நிறைவேற்றுகின்ற அபிவிருத்திப் பிரிவானது கல்வி வெளியீட் டுத் திணைக்களத்தின் கல்விசார் பிரிவாக இனங்காணப்படுகின்றது. தேசிய கல்வி நிறுவகத் தினால் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு அமைவாகப் பாடநூல்களை ஆக்குதல் மற்றும் மீள்பதிப்பு செய்யப்பட்ட நூல்களின் தரத்தை மேம்படுத்துவதற்கான மூலோபாயங்களைத் திட்டமிடுதல் மற்றும் செயற்படுத்துதல் போன்றவை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் அபிவிருத்தி பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கிய வகிபாகங்களாகும். அதேபோன்று கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரம் மற்றும் ஏனைய உயர்கல்வி பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ள மாணவ மாணவிகளுக்கு மேலதிக அறிவினைப் பெற்றுத்தரக்கூடிய மேலதிக வாசிப்பு நூல்களை எழுதும் பணியினை அபிவிருத்திப் பிரிவு மேற்கொண்டுவருகின்றது. இதற்கு மேலதிகமாக இலத் திரனியல் பாடநூலாக்கம் மற்றும் டிஜிட்டல் கற்றல் சாதனங்களை ஆக்குதல் போன்ற பணிகளையும் மேற்கொண்டுவருகின்றது.

கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் நேரடி மேற்பார்வையின்கீழ் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் என மூன்று பிரிவுகளாக அபிவிருத்திப் பிரிவு செயற்படுகின்றது. பிரதி ஆணையாளர்களும் உதவி ஆணையாளர்களுமாக 16 பேர் மற்றும் அபிவிருத்தி உத் தியோகத்தர்களின் பங்களிப்புடன் பாடநூலாக்கச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கு உதவிபுரிவதற்கான பணிக்குழுவாக, முகாமைத்துவ சேவை உத் தியோகத்தர்கள் மற்றும் அபிவிருதி உத்தியோகத்தர்கள் 04 பேருடனான பணியாளர் குழு மற்றும் பாடநூலினைக் கணினியில் வடிவமைப்புச் செய்யவதற்காக 14 சேவை உதவியாளர்களின் சேவையும் பெறப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக, தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையான பாடநூல்கள் மற்றும் பிரிவெனா நூல்களில் அத்தியாவசியமான திருத்தங்கள் செய்யப்பட்டு அனைத்துப் பாடநூல்கள் மற்றும் பிரிவெனா நூல்களும் மீள்பதிப்புப் செய்யப்படுகின்றன.

அபிவிருத்திப் பிரிவினூடாக மேற்கொள்ளப்படுகின்ற மற்றுமொரு குறிப்பிடத்தக்க பணியாக பிரெயில் பாடநூல்கள் அச்சிடப்படுகின்றமையைக் குறிப்பிடலாம். பார்வைக் குறைபாடுள்ள மாணவ -மாணவியருக்குப் பெற்றுக்கொடுப்பதற்கான பிரெயில் பாடநூல்களை அச்சிடலானது 2024 ஆம் ஆண்டும் மேலும் முன்கொண்டு செல்லப்படுமென்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

➢ **வகிபாகங்கள் /கடமைப்பொறுப்புக்கள்**

- தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களுக்கு இலவசமாகப் பெற்றுத்தரப்படும் பாடசாலைப் பாடநூல்கள் மற்றும் பிரிவென் நூல்களை ஆக்குதல்.
- க.பொ.த (உ / தர) மற்றும் வேறு உயர் பரீட்சைகளுக்கான மேலதிக வாசிப்பு நூல்களை ஆக் குதல்.
- வேறு மேலதிக நூல்களை ஆக்குதல்.

  உதாரணம் -

  ★ மொழிபெயர்ப்புகள், கலைச்சொல் அகராதிகள், அகராதிகள், கடந்தகால வினா-விடை நூல்கள்.
- இலத்திரனியல் பாடநூலாக்கம் மற்றும் டிஜிட்டல் கற்றல் சாதனங்களை ஆக்குதல்.
- பார்வைக் குறைபாடுள்ள மாணவர்களுக்கு பிரெயில் பாடநூல்களை ஆக்குதல்.
- களஞ்சியசாலைக்கு வருகின்ற பாடநூல்களின் தரம் மற்றும் பௌதிகத் தன்மைகளைப் பரிசீலித்தல் (Quality checking).

- **2024 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கடமைகளும் பொறுப்புக்களும்**

1. தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளுக்கான சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலப் பாடநூல்களை மீள்பதிப்பின் பொருட்டு வடிவமைத்தல்.

2. தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களில் கற்கின்ற கட்புலக்குறைபாடுள்ள மாணவர்களுக்காக பிரெயில் பாடநூல்களை ஆக்குதல்.

3. மேலதிக வாசிப்பு நூல்களை ஆக்குதல்.

I. 2024 ஆம் ஆண்டு புதிதாக ஆக்கப்பட்ட மேலதிக வாசிப்பு நூல்கள்

01.	நவீன வரைபட விஞ்ஞான முறைமையும் அதன் பிரயோகமும்	சிங்களம்
02.	இலங்கைக் கணக்கியல் தரநிலைகள் மற்றும் நிறுவனக் கணக்கியல்	சிங்களம்
03.	க.பொ.த (உ / தர) தமிழ் மொழி இரண்டாம் பகுதி	தமிழ்
04.	க.பொ.த (உ / தர) மனைப் பொருளியல் - சுற்றுலா	சிங்களம்
05.	க.பொ.த (உ / தர) கணக்கியல்	சிங்களம்
06.	உரைநடை இலக்கியம் - விமர்சன ஆய்வுகள்	சிங்களம்
07.	சிங்கள இலக்கணத் தொகுப்பு	சிங்களம்
08.	க.பொ.த (உ / தர) பௌதிகவியல் - இலத்திரனியல் விஞ்ஞானம்	சிங்களம்

II. பொதுக்கல்வி நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின்கீழ் புதிதாக ஆக்கப்பட்ட கற்றல் சாதனங்கள் மற்றும் பரீட்சை வினாவிடை நூல்கள்,

01.	Support papers for English Language & Literature	ஆங்கிலம்
02.	கேத்திர கணிதம்	சிங்களம்
03.	கேத்திர கணிதம்	தமிழ்
04.	தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை கடந்தகால வினா - விடை நூல்	சிங்களம்
05.	தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை கடந்தகால வினா - விடை நூல்	தமிழ்
06.	க.பொ.த (சா / தர) கடந்தகாலப் பரீட்சை வினா- விடை நூல் - கணிதம்	தமிழ்
07.	க.பொ.த (சா / தர) கடந்தகாலப் பரீட்சை வினா- விடை நூல் - கணிதம்	சிங்களம்
08.	க.பொ.த (சா / தர) கடந்தகாலப் பரீட்சை வினா- விடை நூல் - கணிதம்	ஆங்கிலம்
09.	க.பொ.த (சா / தர) கடந்தகாலப் பரீட்சை வினா- விடை நூல் - வரலாறு	தமிழ்
10.	க.பொ.த (சா / தர) கடந்தகாலப் பரீட்சை வினா- விடை நூல்- வரலாறு	சிங்களம்
11.	க.பொ.த (சா / தர) கடந்தகாலப் பரீட்சை வினா- விடை நூல்- வரலாறு	ஆங்கிலம்
12.	க.பொ.த (சா / தர) கடந்தகாலப் பரீட்சை வினா- விடை நூல்- விஞ்ஞானம்	தமிழ்
13.	க.பொ.த (சா / தர) கடந்தகாலப் பரீட்சை வினா- விடை நூல்- விஞ்ஞானம்	சிங்களம்
14.	க.பொ.த (சா / தர) கடந்தகாலப் பரீட்சை வினா- விடை நூல் - விஞ்ஞானம்	ஆங்கிலம்

III. மேலும், பொதுக்கல்வி நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின்கீழ் தரம் 12, தரம் 13 களில் கல்வி பயிலும் தமிழ் மொழிமூல மாணவர்களுக்குப் பாலியல் ஆரோக்கியம் தொடர்பான அறிவூட்டலை மேம்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட “16+ கட்டிளமைப் பருவத்தினருக்கான விழிப்புணர்வு” என்ற வள நூலானது முடிக்கப்பட்டு அச்சிடப்பட்டது.

4. தேவையின் நிமித்தம் மீள அச்சிடப்படும் மேலதிக வாசிப்பு நூல்களை அச்சிடுவதற்குத் தயாராதல்.

1.	தமிழ் இலக்கியச் செய்யுள்கள்	தமிழ்
2.	நவீன தமிழ்ப் புனைக்கதை மற்றும் நாடக இலக்கியம்	தமிழ்
3.	ஜப்பான் (பகுதி - I)	ஜப்பான்
4.	ஜப்பான் (பகுதி - II)	ஜப்பான்

5. 2024 ஆம் ஆண்டு களஞ்சியசாலைக்குக் கொண்டுவரப்பட்ட நூல்களின் தரம் மற்றும் பௌதிகத் தன்மை தொடர்பான தரப் பரிசோதனைகள் மேற்கொள்ளளப்பட்டு அறிக்கையிடப் பட்டன.

02. உற்பத்திப் பிரிவு

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் உற்பத்திப் பிரிவானது உற்பத்தி மற்றும் விநியோகத் திற்கு பொறுப்பான ஆணையாளரின் கீழ் இயங்குவதுடன் அதில் உற்பத்திப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதி ஆணையாளர் ஒருவரும் உதவி ஆணையாளர் ஒருவரும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் நால்வரும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரும் காரியாலய உதவியாளர் ஒருவரும் சேவை உதவியாளர்கள் மூவரும் இப்பிரிவில் சே வையாற்றுகின்றனர். கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பணிக்கூற்றின்படி பாடசாலை மாணவர்களுக்காக ஆக்கப்படுகின்ற சகல பாடநூல்களையும் அரசாங்க அச்சகம், அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை அச்சகத்தார்கள் மூலமாக அச்சிட்டுக்கொள்வதே இப்பிரிவின் பிரதான கடமைப் பொறுப்பாகும். இதற்கு மேலதிகமாக தேசிய கல்வி நிறுவகம்மூலம் ஆக்கப்படுகின்ற ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் மற்றும் பாடத்திட்டங்களை அச்சிடுவதும் இடம்பெறுகின்றது. மேலும் பரீட்சைத் திணைக்களத்துடன் இணைந்து மதிப்பீட்டறிக்கைகளை அச்சிடுதல், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஏனைய வாசகர்களுக்கு அவசியமான மேலதிக வாசிப்பு நூல்களை ஆக்குதல் மற்றும் க.பொ.த (உ / தர) மற்றும் வேறு உயர் பரீட்சைகளுக்கு அவசியமான மேலதிக வாசிப்பு நூல்களை ஆக்குதல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட் டுள்ளது.

➢ **வகிபாகங்கள் / கடமைப்பொறுப்புக்கள்**

01. பாடநூல்களின் தொகையைத் தீர்மானிக்கும் குழுவின் அறிக்கை அடிப்படையில் விவரக்குறிப்புக் குழு ஒன்றின்மூலம் ஆண்டுதோறும் பாடசாலைப் பாடநூல்களை அச்சிடுவதற்கான விவரக்குறிப்புகளைத் தயாரித்தல்.
02. விவரக்குறிப்புக் குழுவின் தீர்மானத்திற்கேற்ப தயாரிக்கப்பட்ட விவரக்குறிப்புக்களை கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் அனுமதியைப்பெற்று நிதிப்பிரிவிற்கு ஒப்படைத்தல்.
03 ஒவ்வொரு பாடத்திற்கும் பொறுப்பான அதிகாரிகளுக்கு Press copy மற்றும் Transferred copy போன்றவற்றை வழங்கி, அவற்றில் திருத்தங்களை உள்வாங்கி அப்பாடநூல் மற்றும் அதற்குரிய இறுவட்டை (CD/DVD) பாடத்திற்குப் பொறுப்பான அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ளல்.
04. கொள்முதல் செயற்பாட்டின்மூலம் தெரிவுசெய்யப்பட்ட அச்சகங்களுக்கு Press copy மற்றும் திருத்தங்கள் உள்ளடக்கப்பட்ட இறுவட்டுக்களை வழங்குதல்.
05. கையிருப்பிலிருந்து தீர்ந்துபோயுள்ள ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் மற்றும் மேலதிக வாசிப்பு நூல்களை மீள அச்சிடும் பொருட்டு விவரக் குறிப்பைத் தயாரித்தல்.
06. சரவை பார்த்தல் சந்தர்ப்பம் முதல் தரம் மற்றும் பௌதிகத் தன்மைப் பரிசீலனை வரையிலான நூல்களின் சகல நடவடிக்கைகளையும் பரிசீலித்தல்.
07. அச்சகத்தாரை உணர்த்தி, உரிய காலத்தினுள் உரிய நூல்களின் தொகையை களஞ்சிய சாலைகளுக்குப் பெற்றுக்கொடுத்தல்.
08. பாடநூல்களில் திருத்தங்கள் மேற்கொள்ளும்போதும் நூல்களின் தொகைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளும்போதும் உற்பத்திப் பிரிவு அச்சகத்தாருக்கு அறிவித்து அவற்றைத் திருத்துதல்.
09. தேவைப்படுமிடத்து தேவையான அச்சகத்தை பரிசீலித்தல் மற்றும் அவற்றின் அச்சிடல் திட்டத்தைப் பெற்று பரிசீலித்து அதன் உற்பத்தித் திறன் தொடர்பில் அறிக்கை தயாரித்தல்.
10. களஞ்சியசாலை அனுமதியை பெற்றுக்கொள்ளமுன் அச்சிடப்பட்ட பாடநூல்கள் விவரக்குறிப்பிற்கு ஏற்ப உள்ளனவா என்பதைப் பரீசீலிப்பதற்காக உரிய நூல்களின் மாதிரிகளை ஆய்வுகூடப் பரீசீலனைக்கு அனுப்புதல்.
11. விபரக்குறிப்புக்களுக்குப் பொருத்தமான நூலைக் களஞ்சியசாலைக்குப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
12. தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை அச்சிடல்.
13. மேலதிக வாசிப்பு நூல்களை அச்சிடல்.
14. பரீட்சைத் திணைக்களத்துடன் இணைந்து க.பொ.த.(உ/தர), க.பொ.த.(சா/தர), 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை வினா - விடை நூல்களை அச்சிடல்.

முன்னேற்றத்தை காட்டும் குறிகாட்டிகள்
பாடசாலைப் பாடநூல்களை அச்சிடல் - (தரம் 2 - 5, 7 - 9 மற்றும் 11-12) 2024

தொடர் இலக்கம்	அச்சகம்	நூல் வகைளின் எண்ணிக்கை	பிரதிகளின் எண்ணிக்கை
01	அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்	73	7,309,900
02	தனியார் அச்சகங்கள்	246	11,013,450
அச்சிடும் பொருட்டு ஒப்படைக் கப்பட்டிருந்த நூல்களின் மொத்தம்		**319**	**18,323,350**

பாடசாலைப் பாடநூல்களை அச்சிடல் (தரம் 1, 6, 10)
2024 ஆம் ஆண்டில் தரம் 1, 6, 10 களுக்காகப் புதிய கல்விச் சீர்திருத்தங்கள்மூலம் புதிய கற்றல் சாதனங்களை வழங்கும் எதிர்பார்ப்பு இருந்ததால் 2024 ஆம் ஆண்டில் தரம் 1, 6, 10 களுக்குப் பாடநுல்களை அச்டுவது தாமதமானது, ஆனால் அந்த நூல்கள் 2025 ஆம் ஆண்டில் புதிய பாடசாலைத் தவணை ஆரம்பமாவதற்கு முன்னரே அந்த நூல்களை அச்சிடும்படி நிறைவடைந்தது.

வினா - விடை நூல்கள் மற்றும் மேலதிக வாசிப்பு நூல்களை அச்சிடல் - 2024

தொடர் இலக்கம்	நூல்களின் வகை	நூல் வகைளின் எண்ணிக்கை	பிரதிகளின் எண்ணிக்கை
01	மேலதிக வாசிப்பு நூல்கள்	10	19,500
02	வினா - விடை நூல்கள்	14	86,127
அச்சிடப்பட்ட நூல்வகைகளின் மொத்தம்		**24**	**105,627**

03. வெளியீட்டுப் பிரிவு

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் வெளியீட்டுப் பிரிவானது, ஆணையாளரின் (உற்பத்தி மற்றும் விநியோகம்) மேற்பார்வையில் செயற்படுவதுடன், அப்பிரிவானது பிரதி ஆணையாளரின் (வெளியீடு) வழிகாட்டுதலின்கீழ் முகாமைத்துவ சேவை உதியோகத்தர்கள் மூவரும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூவரும் மற்றும் சேவை உதவி சேவையாளர்கள் இருவரும் அலுவலக உதவியாளர்கள் ஒருவரினதும் சேவையைப் பெற்று, கீழ்வரும் வகிபாகங்கள் /கடமைப்பொறுப்புக்கள் 2024 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டன.

➢ **வகிபாகங்கள் /கடமைப்பொறுப்புக்கள்**

1. திறந்த பெறுகை நடைமுறையின்கீழ் தரம் 1, 6, 10 தவிர்ந்த ஏனைய தரங்களுக்கான பாடநூல்கள் 246 மற்றும் தரம் 1, 6, 10 தரங்களுக்கான பாடநூல்கள் 110 யையும் அச்சிடுவதற்குகான கோரல்களை அச்சகத்தாருக்கு வழங்குவதற்கும் அச்சகத்தாருக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத் திற்குமிடையில் ஒப்பந்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.
2. பாடநூல்களை மீள அச்சிடுவதற்காக, 39 பாடநூல்களை அச்சிடுவதற்குகான கோரல்களை அச்சகத்தாருக்கு வழங்குவதற்கும் அச்சகத்தாருக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத் திற்குமிடையில் ஒப்பந்தங்களை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்தல்.
3. திறந்த பெறுகை நடைமுறையின்றி தரம் 1 முதல் தரம் 11 வரையான வகுப்புகளுக்கான 73 வகையான பாடநூல்களுக்கு அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்திற்கு அச்சிடுவதற்குகான கோரல்களைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அந்த 73 வகையான பாடநூல்களுக்காக அரசாங்க அச்சகக் கூட் டுத்தாபனத்துடன் ஒப்பந்தத்தை மேற்கொள்ளல்.
4. 27 மேலதிக வாசிப்பு நூல்களை அச்சிடுவதற்குகான கோரல்களை அச்சகத்தாருக்கு வழங்குவதற்கு அச்சகத்தாருடன் ஒப்பந்தத்தை மேற்கொள்ளல்.
5. 2024 ஆம் ஆண்டு அச்சிடப்பட்ட சகல பாடநூல்களுக்காகவும் 14/0467/530/015 ஆம் இலக்கம் 2014.05.03 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் திறைசேரிச் சுற்றிக்கை ஆவண இலக்கம் 281 க்கு ஏற்ப நூல்களின் விலைகளை நிர்ணயித்தல்.
6. தாமதமாதல், அச்சுப்பிழைகள் போன்ற பிரச்சினைகள் ஏற்படும் சகல நூல்கள் தொடர்பாகவும் வழிகாட்டல் குழுவுக்கு முன்வைத்துத் தீர்வைப் பெற்றுக்கொள்ளல்.
7. கொடுப்பனவு செய்து முடிக்கப்பட்ட பாடநூல்கள் மற்றும் மேலதிக வாசிப்பு நூல்களின் செயலாற்றுகைப் பத்திரங்களை அச்சகத்தாரின் வேண்டுகோளிற்கிணங்க வெளியிடுதல்.
8. கணக்காய்வு விசாரணைகளுக்கு விடையளிப்பதற்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்.
9. தரம் 1, 6, 10 வகுப்புகளுக்கான 110 பாடநூல்களை அச்சிட்டுக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத் திற்கு ஒப்படைக்கும் இறுதித்திகதி 2025 ஜனவரி மாதம் மற்றும் 2025 பெப்ரவரி மாதம் என்பதால் அந்தப் பாடநூல்கள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் 2025 ஆம் ஆண்டில் பெறப்பட்டதுடன் அதற்கான கொடுப்பனவுகள் நிறைவடைந்து வருகின்றன.
10. 2025.02.19 ஆம் திகதியன்று 468 வகையான பாடநூல்களில் 97 சதவீதத்திற்கும் 27 வகையான மேலதிக வாசிப்பு நூல்களில் 85 சதவீதத்துக்குமான கொடுப்பனவுக்காகக் கொடுப்பனவுக் கிளைக்கு முன்வைக்கப்பட்டுள்ளன.

04. நிதிப் பிரிவு

நிதிப் பிரிவுக்காக, பிரதம கணக்காளர் ஒருவரும் கணக்காளர் ஒருவரும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் 13 பேரும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அறுவரும் காரியாலய உதவியாளர் ஒருவரும் சேவை உதவியாளர்கள் இருவரும் இணைக்கப்பட்டுள்ளனர்.

➢ **வகிபாகங்கள் /கடமைப்பொறுப்புக்கள்**

1. பெறுகை நடைமுறை வழிகாட்டல் பிரமாணத்திற்கு இணங்க பாடசாலைப் பாடநூல்களை அச்சிடல், நூல்களைக் கொண்டுசெல்லல் மற்றும் ஏனையவற்றைக் கொள்வனவு செய்தல் தொடர்பாக விலைமனுக் கோரல், தொழினுட்ப மதிப்பீட்டுக் குழுவை இணைப்பாக்கம் செய்தல், பெறுகைக் குழுவிற்கு முன்வைத்தல், அத்தீர்மானத்திற்கிணங்க செயற்படல் மற்றும் கொள்வனவு செய்தலும் சேவை தொடர்பில் கொடுப்பனவு மேற்கொள்ளலும் திணைக்களத் திற்கான ஏனைய பெறுகை நடைமுறைகளை மேற்கொள்ளல்.
2. திணைக்களத்தின் சகல ஊழியர்களதும் சம்பளம் தயார்செய்தல் மற்றும் நிலுவையிலுள்ள காசோலைகளை விநியோகித்தல்.

3. திணைக்களத்தின் சகல ஊழியர்களினதும் மேலதிகநேரக் கொடுப்பனவு (OT), போக்குவரத்துச் செலவுகள், வேறு கொடுப்பனவுகளைச் செலுத்த நடவடிக்கையெடுத்தல்.
4. ஊழியர்களின் முற்பண B கணக்கிற்குரியதான கடன் வழங்கலும் மீள அறவிடலும்.
5. வருடாந்த செலவுகள் மதிப்பீடு, முற்பணக் கணக்கு எல்லையை ஏற்பாடுசெய்தல், மதிப்பீடு மற்றும் எல்லை மறுசீரமைப்புக்குரிய நடவடிக்கைகளும்.
6. கொடுப்பனவு நடவடிக்கைக்கான சகல நூல்கள், லெஜர் மற்றும் கணக்கறிக்கைகளைப் பராமரித்தல்.
7. ITMIS முறைமையை நடைமுறைப்படுத்தல். அதன்போது பணம் செலுத்த வேண்டிய வவுச்ச ர்களை ITMIS முறைமையினுள் உட்படுத்தித் திறைசேரியிலிலுருந்து கட்டுநிதியைப் (Imprest) பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தல்.
8. CIGAS செயற்றிட்டம்மூலம் மாதாந்தக் கணக்கறிக்கைச் சுருக்கம் மற்றும் வங்கிக் கணக்கிணக் கக்கூற்று அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அந்த அறிக்கைகளைத் திறைசேரிக்கு முன்வைத்தல்.
9. வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கு, முற்பணக் கணக்குகளின் இறுதிக் கணக்கறிக்கைகளைத் தயாரித்தல், பொது இருப்புக்கணக்குக் கிடைப்பனவு, கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளல். மாதாந்த ஒப்பீட்டறிக்கைகளைத் தயார்செய்தல்.
10. திணைக்களத்தின் சகல பிரிவுகளுக்குமான நுகர்வுப் பொருட்கள் மற்றும் மூலதனச் சொத்துக்களை விலைக்கு வாங்குதல், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் மற்றும் அறிக்கை களைப் பராமரித்தல்.
11. திணைக்களத்துக்குரியதான சகல பயன்பாட்டுச் சேவைகளுக்குமான பற்றுச்சீட்டுக்களைத் தயார்செய்தெல்.
12. பாடநூல் விநியோக அதிகாரிகளின் கொடுப்பனவுடன் பாடநூல்களைக் கொண்டு சென்றமைக்கான அதிபர்களுக்கான கொடுப்பனவு மற்றும் களஞ்சியப்படுத்தல் நிலையைப் பொறுப்பதிகாரிகளுக்கான கொடுப்பனவுகளைச் செலுத்துதல்.
13. வருடாந்த பொருள் பதிவேட்டுப் பொருள்கள் மற்றும் இருப்புக் கணக்கெடுப்பினை மேற்கொள்ளலும் மதிப்பீட்டுக் குழுவின் விதந்துரைக்கிணங்க சிதைவடைந்த பொருள்களை அகற்றுதலும் உட்பட வேறு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.
14. பாடநூல் விற்பனை மேம்பாட்டு நிலையங்களின் விற்பனை மற்றும் வருமானங்களைக் கணக்கெடுத்தல்.
15. பாடநூலாக்கம், மொழிபெயர்ப்பு, பதிப்பித்தல் போன்றவற்றிற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.

05. தாபனப் பிரிவு

பிரதி ஆணையாளர் (நிருவாகம்)ஒருவரும் நிருவாக அதிகாரி ஒருவரும் பிரதான முகாமைத்துவ சேவை உதவியோகத்தர் ஒருவரும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் எண்மரும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூவரும் காரியாலய உதவியாளர்கள் மற்றும் சேவை உதவியாளர்கள் மூவரும் தாபனப் பிரிவில் இணைக்கப்பட்டுள்ளனர்.

➢ **வகிபாகங்கள் /கடமைப்பொறுப்புக்கள்**

1. திணைக்களத்தின் பொது நிருவாக நடவடிக்கைகள்.
2. திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவரினதும் தனிப்பட்ட கோவைகளைப் பராமரித்தல் மற்றும் அது தொடர்பான சகல கடமைகள்.
3. போக்குவரத்தது விடயம் தொடர்பான சகல கடமைகள்.
4. திணைக்கள உத்தியோகத்தர்களின் முற்கொடுப்பனவு B கணக்கின்கீழ் கடன் மற்றும் முற்பணக்கொடுப் பனவுகளை வழங்குவது தொடர்பான சகல நடவடிக்கைகள்.

5. அக்ரஹாரக் காப்புறுதி விண்ணப்பம் தொடர்பான கடமைகள்.
6. திணைக்கள உத்தியோகத்தர்களைப் பயிற்சி நெறிகளுக்காகப் பரிந்துரைத்தல்.
7. தேர்தல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
8. அலுவலக சுற்றுநிரூபங்கள் மற்றும் அலுவலகக் கட்டளைகளை விநியோகித்தல்.
9. நூல் விற்பனையாளர்களைத் திணைக்களத்தில் பதிவு செய்தல் நடவடிக்கைள்.
10. சமயா சமய ஊழியர்களை இணைத்துக் கொள்ளல் மற்றும் அது தொடர்பான சகல உத்தியோகபூர்வ நடவடிக்கைகள்.
11. பிட்டிப்பன பாட நூல்கள் களஞ்சியத் தொகுதியைப் பராமரித்தல்.
12. திணைக்களத்தின் பதவி நிலை உத்தியோகத்தரின் 1/20 கொடுப்பனவு தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் சகல உத்தியோகத்தினரினதும் மேலதிக நேரக் கொடுப்பனவு, போக்குவரத்துச் செலவு, விடுமுறை நாள்ககுளுக்கான சம்பளம் தொடர்பான நடவடிக்கைகள்.

06. தகவல் தொடர்பாடல் தொழினுட்பப் பிரிவு

திணைக்களத்தின் சகல தரவுகளையும் பராமரித்தல் மற்றும் நிகழ்நிலைப்படுத்தல் தொடர்பான பொறுப்பும், பாடநூல்கள், மேலதிக வாசிப்பு நூல்கள் மற்றும் வேறு நூல்களைக் கணினி மயப்படுத்தல் மற்றும் அவற்றின் மென் பிரதியைப் பெற்று அச்சுக்காகப் பொருத்தமான விதத்தில் தயார் செய்தல் போன்றன தகவல் தொழினுட்பப் பிரிவின் முக்கிய கடமைப் பொறுப்பாகும்.

தகவல் தொடர்பாடல் தொழினுட்பப் பிரிவில், பிரதி ஆணையாளர் ஒருவரும் (தகவல் தொழினுட்பம்) முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஒருவரும் அபிவிருத்தி உத்தியோகத்தர்ஒருவரும் சேவை உத்தியோகத்தர்கள் 15 பேரும் இப்பிரிவில் இணைக்கப்பட்டுள்ளனர்.

- **வகிபாகங்கள் /கடமைப்பொறுப்புக்கள்**

1. அபிவிருத்திப் பிரிவில் ஆக்கப்படுகின்ற பாடநூல்கள் மற்றும் மேலதிக வாசிப்பு நூல்களை கணினி மயப்படுத்தல், மென் பிரதியை தயாரித்தல் மற்றும் நூலின் வெளிப்புற அட்டையைத் தயாரித்தல்.
2. கலஞ்சியசாலைகளில் பாடநூல் விநியோகத்தின் தரவுகளை கணினிமயமாக்கக் கணனி நிகழ்நிரலை தயாரித்தல் மற்றும் களஞ்சியசாலையின் தரவுத்தளத்தைப் பராமரிப்பதற்கான ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொடுத்தல்.
3. பாடநூல்களை அச்சிட்டு களஞ்சியசாலைக்கு வழங்குதல் தொடர்பாக உயர்மட்ட முகாமைக்கு தேவையான அறிக்கையைப் பெற்றுக் கொடுத்தல்.
4. திணைக்களத்தின் இணயத்தளத்தினை நிகழ்நிலைப்படுத்தி நடாத்திச் செல்லலும், அவ்விணையத்தளத்திற்குப் பாடநூல்களை தரவேற்றலும்.
5. கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினதும் கல்வி அமைச்சினதும் விழாக்களுக்குத் தேவையான அழைப்பிதழ்கள், பதாகைகள் (Banners), சுவரொட்டிகளை (Posters) வடிவமைத்தல்.
6. திணைக்களத்தின் அனைத்து கணினிகள் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் தொடர்பான அடிப்படைத் தொழினுட்ப உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
7. உத்தியோகபூர்வ சமூக வலைத்தளக் கணக்கினைப் பராமரித்தலும் இற்றைப்படுத்தலும்.
8. களஞ்சியசாலைக்கு ஒப்படைக்கப்படும் கடைசிப் பாடநூல்களின் மென்பிரதிகளின் (அச்சகத்தாரால் ஒப்படைக்கப்படும் CD/DVD)தரத்தைப் பரிசீலித்தல், பரிந்துரை செய்தல் மற்றும் அவற்றின் மென்பிரதிகளின் காப்புப் பிரதிகளைப் (Backup செய்து) பராமரித்தல்.
9. பாடநூல்களை ஆக்குவது முதல் விநியோகிப்பது வரைத் தானியங்கிச் (Automation) செயன்முறைக்குத் தேவையான தொழிநுட்ப உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

07. விநியோகப் பிரிவு

பாடநூல்கள் விநியோகப் பிரிவானது உற்பத்தி மற்றும் விநியோகத்திற்குப் பொறுப்பான ஓர் ஆணையாளரின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றது. பிரதி ஆணையாளர் ஒருவரும் உதவி ஆணையாளர் ஒருவரும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் அறுவரும் நிரந்தர கனிஷ்ட சேவையாளர்கள் 19 பேரும் இதில் கடமையாற்றுகின்றனர். அரசாங்க மற்றும் அரசாங்க உதவி பெறுகின்ற பாடசாலைகளில் தரம் 1 முதல் 12 வரையான வகுப்புகளில் கல்வி பயில்கின்ற சுமார் 4 மில்லியனுக்கு மேற்பட்ட மாணவர் தொகையினருக்கு ஒவ்வொரு பாடசாலை வருடமும் ஆரம்பமாவதற்கு முன்னர் பாட நூல்களை விநியோகித்தலே இப்பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமையாகும். இச் செயற்பாட்டின்போது பாடசாலைகள் மற்றும் விநியோக நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளும் புள்ளி விபரங்கள் அடிப்படையில் ஒவ்வொரு பாடசாலைகள் மற்றும் விநியோக நிலையங்களுக்குத் தேவையான நூல்களின் அளவு நிர்ணயிக்கப்படுகின்றது. அடுத்த ஆண்டுக்குத் தேவையான மொத்தப் பாடநூல்களின் தொகை இப்புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது.

➢ வகிபாகங்கள் /கடமைப்பொறுப்புக்கள்

1. நாடு முழுவதுமுள்ள சகல தேசிய பாடசாலைகள், மாகாணப் பாடசாலைகள், அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள், பிரிவெனாக்கள் போன்றவற்றிற்குப் புதிய பாடசாலை வருடம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் பாடநூல்களை விநியோகித்தல்.
2. நாடு முழுவதுமுள்ள சகல தேசிய பாடசாலைகள், மகாணப் பாடசாலைகள், அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் வலயக் கல்விக் காரியாலயங்களுக்கு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை விநியோகித்தல்.
3. பாடநூல் விநியோக நிலையங்களிலிருந்து, கோட்டக் கல்விக் காரியாலயங்களிலிருந்து பாடநூல்களைப் பெற்றுக் கொள்ளும் சகல மாகாணப் பாடசாலைகளுக்கும் பாடநூல் போக்குவரத்துக்கான கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளல். மேலும் பாடநூல் விநியோக நிலையம் மற்றும் கோட்டக் கல்விக் காரியாலய நிலையப் பொறுப்பதிகாரிகள் / உதவி நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் சிற்றூழியர்களுக்கான கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
4. பாடநூல்களைக் கொண்டு செல்லும் ள் போக்குவரத்து நிறுவனங்களுக்கான கொடுப்பனவு வவுச்சர்களைத் தயாரித்தல்.
5. பாடநூல்களின் தேவைகள் தொடர்பான தகவல்களைத் திரட்டுதல் / நிகழ்நிலைப் படுத்தல் / அவற்றின் சுருக்கத்தைத் தொகுத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்.
6. மாகாணக் கல்விக் காரியாலயம் / வலயக் கல்விக் காரியாலயம் / கோட்டக் கல்விக் காரியாலயம் / பாட நூல் விநியோக நிலையங்கள் மற்றும் நாட்டின் சகல பாடசாலைகளுடன் தொடர்புகொண்டு பாடநூல்களின் தேவைகளைப் பூரணப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
7. விநியோக கால கட்டங்களில் பாடநூல்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் விநியோகித்தல் தொடர்பான நாளாந்த அறிக்கைகளைத் தயார்செய்தல்
8. திணைக்களத்துக்குரியதான பாடநூல் களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தல் நடவடிக்கைகளை முகாமை செய்தல்மூலம் தொகைகளைப் பெறல், விநியோகித்தல் தொடர்பான அறிக்கைகளைச் சரியாகப் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

➢ பாடநூல்கள் விநியோகம்

2024 ஆம் ஆண்டு பாடநூல்கள் விநியோக செயற்பாட்டிற்கிணங்க நாடு பூராகவும் உள்ள தேசிய பாடசாலைகளுக்கும், 2000 க்கும் மேற்பட்ட மாணவர் தொகையைக்கொண்ட மாகாணப்

பாடசாலைகளுக்கும் கல்வி வெளியீட்டு திணைக்களத்திலிருந்து நேரடியாகப் பாடநூல்கள் விநியோகிப்பட்டதுடன் ஏனைய அரசாங்கப் பாடசாலைகளுக்குப் பாடநூல் விநியோக நிலையங்களூடாகவே பாடநூல் விநியோகம் இடம் பெற்றது. அரசாங்கப் பாடசாலைகள், அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் மற்றும் விசேட பாடசாலைகள் 10,260 உம் அடிப்படைப் பிரிவெனா, மகா பிரிவெனா, சீல மாதா மற்றும் வித்தியாயத்தன பிரிவெனா 828 உம் உள்ளன. அதன்படி 41 இலட்சம் மாணவர்களுக்கு 460 வகையான பாடநூல்களின் கீழ் ஏறக்குறைய 30 மில்லியன் அளவு நூற்பிரதிகள் விநியோகிக்கப்பட்டன.

- **பாடநூல்களை மீளப்பயன்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள்**

  பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்ற பாடநூல்களை வருட இறுதியில் மீள்பாவனையின் பொருட்டு பாடசாலைகளுக்கு ஒப்படைத்தல் வேண்டும் (ஆரம்பப் பிரிவிற்காக அச்சிடப்பட்ட பாடநூல்கள், செயல்நூல்கள் மற்றும் க.பொ.த.(சா/தர)ப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நூல்கள் மீளப்பெறப்பட மாட்டாது.) தரம் 6 முதல் தரம் 9 வரையான வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்காகவே பாடநூல்களை மீள்பாவனை செய்யும் செயற்பாடு நடைமுறைப்படுத்தப்படுவதுடன் பாடநூல்களை சிறப்பாகவும், பொறுப்புடனும் பயன்படுத்து வதன் பெறுமதி தொடர்பானதொரு விளக்கத்தைப் பெற்றுக்கொடுப்பதும் இதற்காக அரசினால் மேற்கொள்ளப்படும் செலவுகளைக் குறைப்பதுமே இச்செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

- **பாடநூல் விநியோகச் செயன்முறை**

- நிகழ்நிலைமூலம் (Online) பாடசாலைப் பாடநூல்களைக்கோரல் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தல்.
- நிகழ்நிலைமூலம் (Online) பாடசாலைப் பாடநூல்களுக்கான கோரல்களைப் பெற்றுக்கொள்ளல்
- பாடநூல்களுக்கான கோரல்களைத் தயார் செய்தல்
- பாடநூல் கோரல்களுக்கமையப் பாடசாலைகள் மற்றும் விநியோக நிலையங்களுக்கு பாடநூல்களை வழங்குதல்.

பாடநூல்களைக் கொண்டுசெல்வதற்கான போக்குவரத்துக் கொடுப்பனவு வவுச்சர்களை ஒழுங்குபடுத்தல்

(அ) பாடநூல் விநியோக நிலையத்திலிருந்து பாடசாலை வரைப் பாடநூல்களைக் கொண்டு செல்வதற்காக அதிபர்கள் மேற்கொள்ளும் செலவுகளைத் திருப்பிச் செலுத்தும் பொருட்டு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்ற வவுச்சர்களை உரிய சுற்று நிருபத்துக்கேற்ப பரிசீலித்து நிதிப்பிரிவிற்கு அனுப்புதல்.

(ஆ) பாடநூல்களைக் கொண்டுசெல்வதன் பொருட்டு தனியார் போக்குவரத்து நிறுவனங்கள் மூலம் முன்வைக்கப்படும் விபரப்பட்டியலுக்குரிய (Invoice) கிலோமீற்றர்களைப் பரிசீலித்து உரிய கொடுப்பனவு வவுச்சர்ப் பத்திரங்களை வடிவமைத்து மேலதிக நடவடி க்கைகளுக்காக அனுப்பி வைத்தல்.

08. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

கல்வி வெளியீட்டுத் திணைக்களம் எதிர்பார்க்கும் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதமாக மிகத் திட்டமிடப்ப ட்டுள்ள உள்ளகவேலை ஒழுங்குகளைக் கொண்டுள்ள முறையான நிருவாக சூழலொன்றை மேற்கொண்டு செல்லும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. அது பிரதானக உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரின்கீழ் வழிநடத்தப்படுவதுடன், இப்பிரிவிலுள்ள பணிக்குழாம் பின்வருமாறு,

- பிரதான கணக்காய்வாளர் 01
- அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 03
- முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் 02
- சேவை உதவியாளர்கள் 02

இப்பிரிவின்மூலம் பிரதானமாக, திணைக்கள உள்ளக நிருவாகமுறை நடைமுறைப்படுத்தப்படுவதை பரிசீலித்தல், திணைக்களம் எதிர்பார்க்கும் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில் வினைத்திறனையும் விளைதிறனையும் பரிசீலித்தல், செயற்பாட்டுக் கட்டுப்பாடு, கணக்குக் குறைபாடுகள், கணக்குக் குறைபாடுகள், செயலாற்றுகை, சட்ட விதிமுறைகளுக்கமையாத கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாகத் தேடியாராய்ந்து கண்டறியப்பட்ட விடயங்களைக் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதன்மூலம் அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல். மற்றும் பின்னூட்டல்மூலம் சிறந்த நிருவாகம் ஒன்றை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

அதன்படி, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுமூலம் 2024 ஆம் ஆண்டு திணைக்களத்திற்குரிய கணக்காய்வு விசாரணைகளில் காணப்பட்ட பிழைகள் மற்றும் குறைபாடுகளைத் திருத்தம் செய்துகொள்வதற்கும் பாடநூல்கள் அச்சிடல், விநியோகித்தல் நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்குமான செயன்முறை தொடர்பான கட்டளைவிதிகள் கீழ்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

தொ. இல	விபரம்	திருத்துவதற்கு எடுத்த நடவடிக்கைகள்
01	கல்வி வெளியீட்டுத் திணைக்களம்பற்றிய 2023.12.31 திகதிய வருட இறுதிக்கான வருடாந்த விபரமான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை.	இவ்வறிக்கைத் தொடர்பில் பதிலளித்தலும் சுட்டிக்காட்டப் பட்டுள்ள குறைகளை சரிசெய்து கொள்வதற்குமான ஆலோச னைகளை வழங்கல்.
02	கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் தொகுத்தல் அறிக்கை.	இவ்வறிக்கை தொடர்பில் பதிலளித்தலும் சுட்டிக்காட்டப்பட் டுள்ள குறைகளை சரிசெய்து கொள்வதற்குமான ஆலோச னைகளை வழங்கல்.
03	தேசிய கணக்காய்வுத் திணைக்களத்திலிருந்து அனுப்பப்பட்டிருந்த கணக்காய்வு வினாக்களுக்கு விடையளித்தல்.	இக்கணக்காய்வு விசாரணைக்கு விடையளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள். இணைபாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல். இனங்காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்திக்கும் பொருட்டு ஆலோசனை வழங்கலும் அது தொடர்பில் பின்தொடர்தலும்
	I. வருடாந்த செயற்றிட்ட முன்னேற்றத்தைப் பரிசீலித்தல் - 2023.	
	II. 2023 ஆம் ஆண்டில் பாடசாலைப் பாடல்கள் விநியோகம் தொடர்பான பெறுகை நடைமுறையின் பரிசீலனை.	
	III. அரச அதிகாரிகளின் முற்பண B கணக்கு 2023 ஆம் ஆண்டு இலக்கம் 21301.	
	IV. கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் வகிபாகம் தொடர்பான செயலாற்றுகை மதிப்பீடு.	
	V. 2023 ஆம் ஆண்டுக்கான கல்வி வெளியீடுத் திணைக்களத்தின் நிதிநிலை அறிக்கைகளின் மதிப்பீடு.	
	VI. ஊழியர்களும் இடமாற்றமும் தொடர்பாகப் பரிசீலித்தல் - 2023.	
	VII. 2025 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட் டுவரும் கலைத்திட்டச் சீர்திருத்தங்களின்கீழ் தரம் 1,6 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான மொடியுள்களை அறிமுகப்படுத்தல்.	
	VIII. மேலதிக வாசிப்பு நூல் ஆக்கம்.	
	IX. வருடாந்த செயற்றிட்ட முன்னேற்றத்தை பரிசீலித்தல் - 2024.	
04	பாடநூல்கள் அச்சிடுதல் தொடர்பாகச் சகல பிரிவுகளினதும் வகிபாகத்தினைப் பரிசீலித்தல்.	குறித்த தினத்தில் பாடநூல்களை அச்சிட முடியாமைக்கான காரணங்களை இனங்கண்டு அவற்றைக் நிவர்த்தியாக்கத் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்தல்.
05	திணைக்களத்திற்குரிய களஞ்சியத் தொகுதிப் பரிசீலனை	களஞ்சியத் தொகுதிகளுக்கு பாடநூல்கள் கிடைத்தல், விநியோகித்தல் மற்றும் அது தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்தல் / களஞ்சியத் தொகுதி முழுவதுமான பரிசீலனை.

06	<u>தாபனப் பிரிவு</u> I. தனிப்பட்ட கோவைகளைப் பராமரித்தல், விதவைகள் மற்றும் அநாதைகளின் பதிவுகளைச் சேகரித்தல், கடமைப் பட்டியல்களைச் சரிபார்த்தல், ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல், வேலைக்கமர்த்துதல் மற்றும் நிரந்தரமாக்குதல் ஆகியவை சரியான நடைமுறைகளைப் பின்பற்றி சரியான நேரத்தில் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதைச் சரிபார்த்தல்.	கோப்புக்கள் முறையான நடைமுறையின்படி பராமரிக்கப்படுவதை உறுதி செய்தல், விதவைகள் மற்றும் அநாதைகள் கொடுப்பனவுகள் முறையாக வசூலிக்கப்படுகின்றதா என்பதை உறுதி செய்தல், ஊழியர்கள் ஆட்சேர்ப்பு உறுதிப்படுத்தல்கள் குறித்து ஆலோசனைகளை வழங்குதல்
	II. தொடர்புடைய சுற்றுநிரூபங்களின்படி தனிப்பட்ட விடுமுறை, உத்தியோகபூர்வ விடுமுறைப் பதிவுகள் மற்றும் கைவிரல் அடையாளப் பதிவுகள் உள்ளிட்ட கோவைகளைப் பராமரித்தல்	அலுவலக மற்றும் தனிப்பட்ட விடுமுறைகளை முறையாக ஆவணப்படுத்துதல், அடிப்படைப் பதிவுகளுடன் கைவிரல் அடையாளப் பதிவுகடிளச் சரிபார்த்தல், குறைபாடுகளைக் கண்டறிந்து தேவையான பரிந்துரைகளை வழங்குதல்.
07	<u>கணக்குப் பிரிவு</u> 1. சம்பளக் கொடுப்புனவுகளைச் சரிபார்த்தல்	சுற்றுநிருபத்திற்கேற்ப ஆவணங்கள் சரியாகவும் பாதுகாப்பாகவும் பேணப்படுகின்றதா என்பதை பரிசீலித்துப் பொருத்தமான ஆலோசனை மற்றும் பரிந்துரைகளைப் பெற்றுக்கொடுத்தல்.
	II. இடைக்கால நடவடிக்கைகள், காசோலை நடவடிக்கைகள் மற்றும் வங்கி இணக்கங்கள், பண வசூலிப்புக்கள்	
08	<u>அபிவிருத்திப் பிரிவு</u> மேலதிக வாசிப்பு நூல்களை ஆக்குதல், தரம், அச்சிடல், மற்றும் GEM செயற்றிட்டத்தினூடாக செயற்படுத்தப்பட்டுவரும் கல்வி ஆய்வுகள் தொடர்பான விடயங்களைப் பரிசீலித்தல்.	மேலதிக வாசிப்பு நூல்களை ஆக்குவதிலுள்ள பிரச்சி னைகளைக் குறைப்பதற்குத் தேவையான ஆலோசனை மற்றும் பரிந்துரைகளைப் பெற்றுக்கொடுத்தல்.
09	<u>உற்பத்தி மற்றும் விநியோகப் பிரிவு</u> 1. தனியார் வாகனங்களைப் பயன்படுத்திப் பாடநூல்களைக் கொண்டு செல்லல்.	தொடர்புடைய கோப்புகளைச் சரிபார்த்தல், குறைபாடுகளைச் சுட்டி க்காட்டுதல், தேவையான ஆலோச னை மற்றும் பரிந்துரைகளைப் பெற்றுக்கொடுத்தல்.
	II. பாடநூல் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள அதிபர்கள், நிலையப் பொறுப்பதிகாரிகள், உதவி நிலையப் பொறுப்பதிகாரிகள், ஊழியர்கள், திணைக்கள அதிகாரிகளுக்காக வளங்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான கணக்காய்வு.	

	III. 2024 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட திகதியில் பாடசாலைகள் மற்றும் பாடநூல் விநியோக நிலையங்களுக்குப் பாடநூல்களின் விநியோகம், கணினி மென்பொருளைப் புதுப்பித்தல் குறித்து யதார்த்த நிலையைச் சரிபார்த்தல். IV. பாடநூல்களின் விநியோகக் கோப்பினைப் பரிசீலித்தல்	
10	<u>விற்பனை மேம்பாட்டுப் பிரிவு</u> திணைக்களத்தின் சகல விற்பனை மேம்பாட்டு நிலையங்களையும் பரிசீலித்தல்	நூல்களின் இருப்பினைப் பௌதிக ரீதியாகச் சரிபார்த்து இருப்புப் பதிவேட்டுடன் ஒப்பிட்டுப் பார்த்தல், விற்பனை மேம்பாடட்டு மையங்களின் நிருவாக நடவடிக்கைகளை ஆய்வு செய்தல், குறைபாடு களைச் சுட்டிக்காட்டுதல், தேவையான ஆலோசனை மற்றும் பரிந்துரைகளைப் பெற்றுக்கொடுத்தல்.

09. விற்பனை மேம்பாட்டுப் பிரிவு

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் விற்பனை மேம்பாட்டு நிலையங்களூடாகப் பாட சாலைப் பாடநூல்கள், மேலதிக வாசிப்பு நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், கலைச் சொல் அகராதிகள் மற்றும் கடந்த காலப் பரீட்சை வினாப்பத்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

தற்போது திணைக்களத்தின் விற்பனை மேம்பாட்டு நிலையங்கள் வித்யோதய பிரிவெனா (மருதானை), இசுருபாய, மகரகம தேசிய கல்வி நிறுவகம், மீப்பே ஆசிரிய பயிற்சி நிலையம், நாரஹேன்பிட்ட விசேட பொருளாதார நிலையம் மற்றும் யாழ்ப்பாண மத்திய கல்லூரி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இவ்வனைத்து விற்பனை மேம்பாட்டு நிலையங்களிலும் திணைக்கள வெளியீடு கள், மேலதிக வாசிப்பு நூல்கள், ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டிகள் போன்றன விற்பனை செய்யப்படுவதுடன் மருதானை, இசுருபாய, மீப்பே, நாரஹேன்பிட்ட மற்றும் யாழ்ப்பாண நிலையங்களில் பாட நூல்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

கல்வி வெளியீட்டுத் திணைக்கள விற்பனை மேம்பாட்டுப் பிரிவு 2024.12.31 ஆம் திகதியன்று 46 பேரைக் கொண்டதாக தமது பணிக்குழுவினரைச் செயற்படுத்தி வருகின்றது.

இலங்கை கல்வி நிருவாக சேவை தரம் II அதிகாரியொருவர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஐவர் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் இருவர், விற்பனை உதவியாளர்கள் ஐவர், நிரந்தர சேவை உதவியாளரல்கள் 25 பேர் காரியாலய சிற்றூழியர்கள் நால்வர் மற்றும் காவலாளி ஒருவருமாக விற்பனை மேம்பாட்டுப் பிரிவில் இணைக்கப்பட்டுள்ளனர். பணிக்குழுவினர் இணைக்கப்பட்டுள்ள விதம் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.



- **2024 ஆம் ஆண்டுக்காக விற்பனை மேம்பாட்டு பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட கடமைகளும் பொறுப்புக்களும்**

2024 ஆம் ஆண்டில்,

- அனைத்து விற்பனை மேம்பாட்டு நிலையங்களையும் ஒன்றிணைத்தல்
- சர்வதேச பாடசாலைகளுக்கான பாடநூல்களைப் பெற்றுக்கொடுத்தல்
- நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் நாடாத்தப்படும் புத்தகக் கண்காட்சிகளுடன் இணைந்து கொள்ளும் பிரதான பணியை மேற்கொள்ளல்.

2024 ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட புத்தகக்கண்காட்சி தொடர்பான தகவல்கள்

புத்தகக்கண்காட்சி	காலம்	வருமானம்
கண்டி கண்காட்சி	2024.07.01 - 07 வரை	1,890,547.17
கம்பகா கண்காட்சி	2024.07.25 - 28 வரை	379,565.94
கொழும்பு சர்வதேச புத்தகக்கண்காட்சி	2024.09.27 - 2024. 10.06 வரை	4,064,161.61

இதற்கு மேலதிகமாக விற்பனை மேம்பாட்டு நிலையங்களில் இருந்து பெறப்டும் மாதாந்த வருமானம் பற்றி சுருக்க அறிக்கை பின்வருமாறு

2024 விற்பனை மேம்பாட்டு நிலையங்களின் மாதாந்த வருமானம் பற்றி சுருக்க அறிக்கை

மாதம்	இசுறுபாய	நாரஹேன்பிட்ட	மஹரகம	மீபே	யாழ்ப்பாணம்	வித்யோதய	மொத்தம்
